DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| Name | பாஸ்கரன் | Village | கல்ட்ரபட்டி |
|---|---|---|---|
| Father's Name | சுப்பிரமணி | Taluk | வாணியம்பாடி |
| Age | 41 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of

**10.03.2026**

**EA.4–2022 in EP – 24 – 2017 in OS.No.122/1996 ம.சா.3 12.44 PM – 12.55 PM**

**குறுக்கு விசாரணை (1ம் எதிர்மனுதாரர் தரப்பில்)–**

1. என்னுடைய வயது 41 ஆகும். இந்த மனுவை தாக்கல் செய்துள்ள எனது தந்தையின் பெயர் என்னவென்றால் சுப்பிரமணி ஆகும். மனு சொத்தானது யார் யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்றால் விநாயகம் என்பவரிடமிருந்து வெங்கடேச கவுண்டர் வாங்கினார். சுப்பிரமணி என்பவருக்கும் வெங்கடேச கவுண்டருக்கும் என்ன உறவு முறை என்றால் சுப்பிரமணி என்பவரின் தந்தை தான் வெங்கடேஷ் கவுண்டர் ஆவார். எந்த தேதியில் அவர் வழங்கப்பட்டது என்றால் 20.02.1992 அக்கிரிமென்ட் போட்டு 04.06.1992ம் தேதியில் கிரயம் வாங்கினார்.

2. மேற்படி கிரயம் வாங்கிய போது என்னுடைய வயது என்ன ஒரு ஏழு வயது இருக்கும் என்றால் சரிதான். கிரயம் வாங்கி ஆலங்காயம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தார்கள் என்றால் இல்லை வாணியம்பாடி சார்பாக அனைவருக்கும் பதிவு செய்யப்பட்டது. மனு சொத்தானது ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் பச்சையப்ப கவுண்டர் சொத்தாகும். மேற்படி பச்சையப்ப கவுண்டரின் மகன் பெயர் கிருஷ்ண கவுண்டர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. மேற்படி பச்சையப்ப கவுண்டரின் சகோதரர்கள் குழந்தை கவுண்டர், துரைசாமி கவுண்டர் மற்றும் மாசிலாமணி என்றால் சரிதான். கிருஷ்ணகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தை மனு சொத்துக்கள் உட்பட இதர சொத்துக்கள் குறித்து பச்சையப்ப கவுண்டர், துரைசாமி கவுண்டர், குழந்தை கவுண்டர் மற்றும் மாசிலாமணி ஆகியோர்கள் இடையே பாகப்பிரிவினை வழக்கு திருப்பத்தூர் மாவட்ட

நீதிமன்றத்தில் நடைபெற்றது தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கானது அ.வ.எண்.109/1992 திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் நடந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு பின்னிட்டு நீதிமன்ற ஆள்வரை பிரிந்து திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.653/1992 ஆக பதிவு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அதற்கு பின்னிட்டு 1994ம் வருடம் வாணியம்பாடியில் புதிதாக உரிமை நீதிமன்றம் உருவாக்கப்பட்டு அந்த நீதிமன்றத்தில் அ.வ.எண்.506/1995 என பதிவு செய்யப்பட்டு வழக்கு நடைப்பெற்றது என்றால் எனக்கு தெரியாது.

4. விநாயகத்தின் தகப்பனார் பச்சையப்பன் வழக்கில் ஆஜராகி தரப்பினராக வழக்கை நடத்தி வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 06.01.1994ம் தேதி பாகப்பிரிவினை வழக்கில் தீர்ப்பாகி இந்த மனுவில் எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக முதல்நிலை தீர்ப்பாணையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மற்றொரு வழக்கான அ.வ.எண்.122/1996 நீதிமன்ற உறுப்பினர் 04.01.2005 ம் தேதி இறுதிநிலை தீர்ப்பணை வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றியும் எனக்கு தெரியாது. மேற்படி இறுதி நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு சொத்தை என அனைத்தும் அளந்து பிரிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. மேற்படி நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கையில் கிருஷ்ண கவுண்டரின் வாரிசுதாரர்களுக்கு பாகம் பிரித்து வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்தல் விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை அடிப்படையில் தங்களுக்கு வந்த பாகத்தை சுவாதீனம் எடுக்க தான் நிறைவேற்று மனுவான 36/2009 இந்த மனுவின் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விநாயகம் என்பவர் அசல் வழக்கு 122/1996 பிறப்பிக்கப்பட்ட முதல் நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதி நிலை தீர்ப்பாணை ரத்து செய்ய இ.ம.எண்.604/2013 மற்றும் 605/2013 தாக்கல் செய்து விநாயகத்திற்கு எதிராக 03.11.2014 தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. மேற்படி மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பின்பு நிறைவேற்றுமணவில் சுவாதீனம் எடுத்த அமீனா சென்ற போதுதான் என்னுடைய தகப்பனார் இந்த மனுவை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் ஒன்றாவது

சாட்சியம் குறுக்கு விசாரணையை கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் சரிதானா இருந்தால் சரிதான். நீதிமன்றம்  மாசிலாமணி, துரைசாமி கவுண்டர் மற்றும் குழந்தை கவுண்டர் ஆகியோருக்கு மாதமாக கொடுக்கப்பட்ட சொத்தில் நாங்கள் எதுவும் உரிமை கூறவில்லை என்றால் இல்லை அதுவும் எங்களுக்குத்தான் உரிமை. நீதிமன்ற மூலம் ஒதுக்கப்பட்ட பாகமானது எங்களுக்கு தான் உரிமை என நான் கூறுகிறேன் என்றால் ஆமாம்.

7. மேற்படி அசல் வழக்கில் நாங்கள் தரப்பினரும் அல்ல என்றாலும் எங்களை யாரும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும் சரிதான். மனுசொத்து மற்றும் இதர சொத்துக்கள் அனைத்தும் கிருஷ்ண கவுண்டரின் பூர்வீக சொத்துக்கள் என்று சொன்னால் இல்லை. பின்பு எந்த வகையான சொத்து என நான் கூறுகிறேன் என்று சொன்னால் பச்சையப்பன் கவுண்டரின் சொத்து ஆகும். மேற்படி பச்சையப்ப கவுண்டருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என அவரது பெயரில் உள்ள தனிப்பட்ட சொத்து என காண்பிப்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் பத்திரம் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி ஆவணமானது எந்த தேதியில் மற்றும் எந்த வகையான ஆவணம் என்று சொன்னால் சாட்சி அதற்கு பத்திரம் என கூறுகிறார்.

8. நான் தவறாக சங்கதிகள் கொண்டு சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் ஏற்கனவே நீதிமன்றத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்ட சொத்துக்கள் குறித்து தான் உரிமை உள்ளது என தவறாக கூறுகிறேன் என்று சொன்னால் சரி அல்ல. நிறைவேற்று மனுவில் அமீனா  சுவாதீனம் எடுக்க வந்ததிலிருந்து எவ்வளவு நாட்கள் கழித்து என் தகப்பனார் இந்த மனுவை தாக்கல் செய்தார் என்று சொன்னால் 15.07.2022 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டது.

9. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளது போன்று 20.02.1992 ல் விநாயகம் என்பவர் எங்களுக்கு எந்த ஒரு ஒப்பந்தமும் போடவில்லை என்றாலும் அப்படி போடுவதற்கு சட்டப்படி அவருக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல உரிமை இருந்தது ஒப்பந்தம் போடப்பட்டது. அதே போல் 04.06.1992–ல் ஏற்படுத்தப்பட்ட கிரய  பத்திரமும் செல்லாது என்றாலும் அது எங்களுக்கு எந்த ஒரு உரிமையும் வழங்காது  என்று சொன்னால் சரியல்ல. 30.04.1992–ல் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என என்னுடைய தகப்பனார் அவர்கள் குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார் என்றால் அது தவறாகும்.

10. எந்த தேதியில் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என ஆவணம் ஏதேனும் எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தரப்பினர்களுக்கிடையே பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது எனக்கு வயது ஏழு இருக்கும் என்றால் சரிதான். எனக்கு நிறைவேற்றுமனுவில் உள்ள விவரமும் தெரியாது என்றாலும் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது குறித்து எந்த விவரமும் தெரியாது என்றாலும் என்னுடைய தகப்பனார் கேட்டுக் கொண்டதற்கு கிணங்க நான் தவறாக சாட்சியம் இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே என்னுடைய தகப்பனார் தாக்கல் செய்த இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.***

**(2, 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.)**

DISTRICT MUNSIF

ESHWAR VISWANATHAN

Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.